**23.09.2025**

**O.S.No.257/2022**

**வா.சா. 1: தனலட்சுமி**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த வழக்கு என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தான் தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் கோரவில்லை. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியும். அதில் மூன்று சர்வே எண் உள்ளது. அது 6/1ஏ அது 1 ஏக்கர் 33 செண்ட் உள்ளது. 6/2ஏ அது 63 செண்ட் உள்ளது. மேற்படி இரண்டு சொத்தும் நரசிங்கபுரத்தில் உள்ளது. உடையம்பட்டியில் உள்ள சொத்து 50/4ஏ 1 ஏக்கர் 30 செண்ட் உள்ளது. மேற்படி எந்த சர்வே எண்ணிற்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் நரசிங்கபுரத்தில் உள்ள சொத்திற்கு மட்டும் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து எனது தந்தையின் பூர்வீக சொத்து. பாட்டன் சொத்து. பூர்வீக சொத்தில் ஏதேனும் பாகப்பிரிவினை செய்துள்ளார்களா என்றால் என் தாத்தா என் அப்பா பெயரில் பத்திரம் செய்துள்ளார். அது கிரயப்பத்திரம் ஆகும். அந்த கிரயப்பத்திரத்தில் வழக்கு சொத்துக்கள் மூன்றும் கண்டுள்ளன.

2) எனது தந்தையருக்கு 3 மகன் 1 மகள். எனது தந்தை 09.05.2009ல் இறந்தார். அப்போது எனது வயது சரியாக நினைவில் இல்லை. தற்போதைய வயது 43. எனது அப்பா இறக்கும்போது எனக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது. 1985ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. எனக்கு திருமணம் செய்த போது எனக்கு வேண்டிய சீர்வரிசைகளை எனது அப்பா செய்தாரா என்றால் அப்போது அவருக்கு வசதி இல்லை என்பதால் சீர்வரிசை எதுவும் செய்யவில்லை. என் திருமணத்தின் போது எனது அப்பா எனக்கு சேரவேண்டிய சீர்வரிசைகள் அனைத்தையும் செய்தார் என்றும் நான் வழக்கிற்காக சீர்வரிசை செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தில் எனக்கு 1/4ல் பங்கு உள்ளது என்று எனது அப்பா சொல்லி உள்ளார். எழுத்து மூலமான ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை.

3) இந்து வாரிசுரிமைச் சட்டப்படி 1985க்கு முன்பே எனக்கு திருமணம் ஆகிவிட்டதால் எனது அப்பா சொத்தில் நான் பாகம் கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு சொத்தில் எனது அண்ணன் மற்றும் 2 தம்பிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். எனக்கு சொத்து வேண்டும் என்றால் எனது அப்பா இறந்த உடனே கேட்டிருப்பேன் என்றும் என் அப்பா என் அண்ணன் தம்பி அனைவரும் சிர்வரிசை செய்துவிட்டனர் என்றும் தற்போது நிலத்தின் மதிப்பு உயர்ந்து விட்டதால் நான் தற்போது பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தை விற்க போகிறார்கள் என்று நான் சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு சொத்தில் எந்த வழக்கு பரிகாரமும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி வழக்கு சொத்தில் எவ்வித பாகமும் கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் சுவாதீனம் இல்லை என்பதால் நான் செலுத்தி உள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.23 17:55:22 +0530

**Subordinate Judge, Attur.**